தாக்குதலில் 6 போலீசார் பலி

உட்பட 6 மாவட்டங்களில்

நோட்டீஸ்கள் கடந்த வாரம்

# இருதய நோயை கண்டறிய நவீன 'ஸ்டெதஸ்கோப்': தமிழக வாலிபர் சாதனை

கும்பகோணம், அக்.24-

இருதய நோயை 10 வினாடியில் கண்டறியும் புதிய கருவியை வடிவமைத்து சாதனை படைத்துள்ளார் தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்.

இருதய நோய்க்கு சிகிச்சை பெற வேண்டும் என்றால் இசிஜி அல்லது எக்கோ பரிசோதனை செய்து நோய் இருக்கிறதா என கண்டறிந்து பின்னர் பலகட்ட சோதனைகள் செய்ய வேண்டும். இந்த வகையில் சிகிச்சை பெற கால அவகாசம் அதிகமாக தேவைப்படுவதோடு பொருளாதார செலவும் அதிகமாகும். இந்நிலையில் இருதய நோய் குறித்த விவரங்களை எளிமையாக அறியும் வகையில் தமிழகத்தைச் சேர்ந்த 30 வயது இளைஞர் புதிய கருவியை வடிவமைத்து உள்ளார். இதனை மத்திய, மாநில அரசுகளும் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுள்ளன.

இக்கருவியை வடிவமைத்த தமிழக இளைஞர் அரவிந்த் தியாகராஜன் தனது கண்டுபிடிப்பு குறித்து கூறியதாவது:

தஞ்சாவூர் எனது பூர்வீகம். எனது தந்தை தியாகராஜன், தாயார்





புதிய கருவியை கொண்டு மருத்துவ முகாமில் சுவாமி கிருஷ்ணானந்த மகராஜிற்கு இருதய நோய் சோதனை செய்யும் அரவிந்த் தியாகராஜன். (அடுத்தபடம்) மார்மர் டாக் நவீன கருவி.

அனு. நான் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன் பிரிவில் பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். எனக்கு சிறு வயதில் கீழே விழுந்து இருதய பாதிப்பு ஏற்பட்டதால் இருதய நோய் சம்பந்தமாக ஏதாவது செய்ய முடிவு செய்து இத்தகைய கருவியை வடிவமைக்கும் எண்ணம் தோன்றியது.

சிங்கப்பூரில் இருந்தபோது இருதய நோயை கண்டறியக்கூடிய எளிய வடிவிலான கருவியை உருவாக்க விரும்பி அதற்கான விவரங்களை கூறியதை தொடர்ந்து சிங்கப்பூர் அரசு ஒரு மில்லியன் டாலர் உதவி செய்து எனது ஆராய்ச்சிக்கு ஊக்கமூட்டியது. தொடர்ந்து 2005ம் ஆண்டு வரை சிங்கப்பூரில் இருந்து இதுகுறித்து பல முயற்சிகளை மேற்கொண்டேன்.

பின்னர் ஆஸ்திரேலியா மற்றும் கென்யா நாடுகள் எனது முயற்சிக்கு ஒத்துழைப்பு கொடுத்து 2 நாடுகளும் தலா 5 மில்லியன் டாலர் தந்து உதவியதால் புதிய கருவியை வடிவமைத்தேன்.

முதலில் 'ஸ்டெதஸ்கோப்' வடிவில் இருதய நோயை அறியும் கருவியை வடிவமைத்தேன். அப்போது அதன் மதிப்பு ரூ. 25 ஆயிரம். தற்போது அதில் புதிய முறையாக 'மர்மர் டாக்' முறை மற்றும் பிரின்டிங் செய்து தருவதை இணைத்துள்ளேன். தற்போது கருவியின் விலை ரூ.35 ஆயிரம். இப்புதிய கருவி வரும் நவம்பர் 2ம் தேதி சென்னையில் அரசு அதிகாரிகள் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இக்கருவி கர்நாடகா மாநிலம் மைசூரில் தயாரிக்கப்படுகிறது. சென்னை பெருங்குடியில் அலுவலகம் உள்ளது. இங்கு 25க்கும் மேற்பட்ட தொழில் நுட்ப வல்லுனர்கள் பணிபுரிகின்றனர்.

இப்புதிய கருவி மூலம் இருதய நோய் உள்ளவர்களை மிக எளிதாக கண்டறிந்து சிகிச்சை அளிக்கலாம். அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் இக்கருவிக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. தற்போது இந்தியாவிலும் இதற்கு நல்ல வரவேற்பு கிடைக்க தொடங்கியுள்ளது.

தொடர்ந்து இசிஜியோடு கூடிய இருதய நோய் கண்டறியக்கூடிய புதிய கருவியையும், மருத்துவக்கல்லூரி மாணவர்கள் இருதய நோய் குறித்து பயில்வதற்கு ஏற்ற ப்ரொஜக்டர் கருவியையும் தயாரிக்க திட்டமிட்டுள்ளேன். இத்தகைய கருவிகளின் மதிப்பு வெளிநாட்டில் ரூ.10 லட்சமாக உள்ளது.

அதனை ரூ. ஒரு லட்சத்துக்கும் குறைவான விலையில் தயாரிக்க முயற்சி எடுத்து வருகிறேன். என்றார் இந்த சாதனை இளைஞர்.

## 'ரொம்ப ஈசி'

இந்த புதிய நவீன கருவியை டாக்டர்கள் 'ஸ்டெதஸ்கோப்' போல மிக எளிமையாக பயன்படுத்தி நோயாளியிடம் சோதனை செய்யலாம். அறுவை சிகிச்சைக்கான நோய் இருக்கிறதா என்பதை 'மர்மர் டாக்' மூலம் 10 வினாடிகளில் மிக எளிதாக கண்டறியலாம். பரிசோதனைக்கு பின்னர் இசிஜி போல் பிரிண்டர் மூலம் ரிப்போர்ட்டையும் உடனே பெறலாம்.